(6 pages) **Reg. No. : .......................................**

**Code No. : 8337** **Sub. Code : ZTLM 24**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2022

Second Semester

தமிழ் — Core

சிற்றிலக்கியம்

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்று குறிப்பிடும் நூல் எது?
   (அ) நவநீதப்பாட்டியல்
   (ஆ) வெண்பாப்பாட்டியல்
   (இ) பிரபந்த மரபியல்
   (ஈ) பன்னிரு பாட்டியல்

2. 'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்று தொல்காப்பியம் குறிப்பிடும் இலக்கிய வகை
   (அ) யாப்புநூல் (ஆ) காப்பியம்
   (இ) சிற்றிலக்கியம் (ஈ) கலிப்பாட்டு

3. 'மலையாள் வயிறு வாய்த்த முழுமணி" யார்?
   (அ) முருகன் (ஆ) திருமால்
   (இ) சிவன் (ஈ) இந்திரன்

4. ஆதிமுனிவன் என்று தமிழ்விடுதூது யாரைக் குறிப்பிடுகிறது?
   (அ) தொல்காப்பியர் (ஆ) திருவள்ளுவர்
   (இ) சிவபெருமான் (ஈ) அகத்தியன்

5. மரியாள் எதனுடன் ஒப்புமைபடுத்தப்படுகிறது?
   (அ) மழை (ஆ) சங்கு
   (இ) பரிசுத்த ஆவி (ஈ) கடல்

6. உலகநடை நீங்கிப் பித்தநடை கொண்டவர் யார்
   (அ) மஸ்தான் சாகிபு (ஆ) நபிகள் நாயகம்
   (இ) மௌலவி ஷாம் (ஈ) ஆற்காடு நவாப்

7. சீர் தந்த தாமரையாள் கேள்வன் என்றழைக்கப்படும் மன்னன் யார்?
   (அ) இராசராசன் (ஆ) குலோத்துங்கன்
   (இ) விக்கிரமச்சோழன் (ஈ) காடவர்கோன்



Nesamony Memorial Christian College, Marthandam

8. கொற்றவையின் கோயில் கோபுரத்தையும் மதிலையும் காத்து நின்றது

(அ) தெய்வம் (ஆ) படைத்தலைவன்

(இ) யானை (ஈ) கொள்ளிவாய்ப் பேய்

9. உழவுத்தொழிலின் மேன்மையைக் குறிப்பிடும் இலக்கியம் எது?

(அ) கலம்பகம் (ஆ) உலா

(இ) பள்ளு (ஈ) தூது

10. பள்ளர்கள் எதைக் கண்டு ஆடிப்பாடி மகிழ்ந்தனர்?

(அ) மழைக்குறி (ஆ) தெய்வம்

(இ) பெருவெள்ளம் (ஈ) வயல்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) சிற்றிலக்கியங்களின் அமைப்பு பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பக்தி இலக்கியங்களில் சிற்றிலக்கியத்தின் செல்வாக்கு பற்றிக் குறிப்பிடுக.



12. (அ) கந்தபுரியின் சிறப்பைக் குமரகுருபரர் எவ்வாறு வருணிக்கிறார்?

(அல்லது)

(ஆ) சிவபெருமான் நிலாச் சூடும் காரணங்களாகக் காரைக்கால் அம்மையார் குறிப்பிடுபவை யாவை?

13. (அ) திருக்காவலூர் அன்னையின் சிறப்புகள் என்ன?

(அல்லது)

(ஆ) மெய்பொருளாகிய இறைவனைத் தரிசிக்க குருவின் துணையைக் குணங்குடியார் எவ்வாறு நாடுகிறார்?

14. (அ) சோழ மன்னனுடைய பட்டத்து யானையின் வீரம் எத்தகையது?

(அல்லது)

(ஆ) திரிகூட மலையின் அழகைக் குற்றாலக் குறவஞ்சி எவ்வாறு வருணிக்கிறது?

15. (அ) முக்கூடற்பள்ளு குறிப்பிடும் விதை வகைகளையும் மாட்டு வகைகளையும் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பண்ணையாரிடம் மூத்தபள்ளி என்ன கூறி முறையிட்டாள்?



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

16. (அ) சிற்றிலக்கியங்களின் பாடுபொருள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பிற்கால இலக்கியங்களில் சிற்றிலக்கியத்தின் செல்வாக்கு பற்றி விவரிக்க.

17. (அ) இறைவனின் இயல்புகளாக அற்புதத் திருவந்தாதி கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்மொழியின் சிறப்புகளைத் தமிழ்விடுதூது வழிப் புலப்படுத்துக.

18. (அ) பிற கலம்பக நூல்களில் இருந்து திருக்காவலூர்க் கலம்பகம் வேறுபடுமாற்றை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) இறைவனும் தாமும் வேறல்ல எனும் நிலையை அடைய மஸ்தான் சாகிபு வேண்டியவற்றைத் தொகுத்துரைக்க.

19. (அ) விக்கிரமச் சோழனின் கொடைச் சிறப்பும் கோயிற் பணிகளும் பற்றி விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) குற்றாலநாதரின் தென்னாரிய நாட்டு வளம் பற்றி எடுத்துரைக்க.



20. (அ) உழவர்களின் வாழ்க்கையை முக்கூடற்பள்ளு வெளிக்காட்டும் விதம் பற்றி ஆராய்க.

(அல்லது)

(ஆ) 'பள்ளு இலக்கியமும் சமுதாயப்பார்வையும்' எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

———————



*Nesamony Memorial Christian College, Marthandam*